# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

இரண்டாந்தவணைப் பரீட்சை - 2022

| | | | |
|---|---|---|---|
| தரம் :- 11 | வரலாறு II | 33 T II | 3.00 மணித்தியாலம்<br>மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள் |

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

- பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

1.

(அ).

i. கீழே தரப்பட்டள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

தெதுறு ஓயா, யான் ஓயா, சொரபொரவாவி, ஊராந்தோட்ட, மகாதித்த, கோகர்ண விகாரை, கலாவாவி, இராவண எல்ல, மகாகம, தேவநகர, கோட்டை, ரந்தெனிவெல

(12 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள பகுதி உலப்புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

கொன்ஸ்தாந்திநோபிள், போர்த்துக்கல், இத்தாலி, சுமாத்திரா, மும்பை, சுயெஸ் கால்வாய்

(06 புள்ளிகள்)

(ஆ)

i. கீழே A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறையிப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக

A- ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரத்தைத் தெரிவு செய்து அதனைத் தலைநகராக்கிய மன்னன்.

B- போர்த்துக்கேயர் படுதோல்வியடைந்த முல்லேரியாப் போரில் சீதாவாக்கைப் படைகளுக்குத் தலைமை தாங்கியவன்.


C- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தவர்

D- 1795 இல் பிரித்தானியாவிற்குத் தப்பிச் சென்ற ஒல்லாந்த ஆட்சியாளர் (04 புள்ளிகள்)

• A,B என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.

A



1.படம் A இனைப் பெயரிடுக


2.இதனைக் கண்டறிந்தவரின் பெயர் யாது?

3. மேற்படி உபகரணத்துடன் தொடர்புடைய துறை எது?

4. மேற்படி உபகரணத்தின் மூலம் செய்திகள் எவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்டது? (04 புள்ளிகள்)

iii.

B



1.படம் B யைப் பெயரிடுக?

2.இதனைப் பொறித்த மன்னன் யார்?

3.இதில் கூறப்பட்டிருக்கும் விடயம் யாது?

4.மேற்படி மன்னனின் ஆரம்பகால ஆட்சி பிரதேசத்தின் தலைநகரம் எது? (04 புள்ளிகள்)

## பகுதி II

2.

(i) புராதனகாலத்தில் இலங்கை தொடர்பு வைத்திருந்த மூன்று நாடுகளைத் தருக? (03 புள்ளிகள்)

(ii) A இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்கள் மூலம் நூல்கள் எழுதிய இரண்டு எழுத்தாளர்கள்

B இலங்கைக்கு வருகை தராது, இலங்கைக்கு வருகை தந்தவர்களிடம் தகவலறிந்து நூல்கள் எழுதிய இரண்டு எழுத்தாளர்களின் பெயர்களைத் தருக? (04 புள்ளிகள்)

(iii) இலக்கிய மூலாதாரங்களின் பயன்பாடுகளை இரண்டு காரணிகளினடிப்படையில் விளக்குக? (05 புள்ளிகள்)

(iv) தொல்பொருள் மூலாதாரங்கள் இன்று அழிவடைந்து வருவதற்கான மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக? (06 புள்ளிகள்)

3.

(i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித

A - வாழ்வதற்கு ஆர்வம் காட்டிய இரண்டு பிரதேசங்கள்.

B - வெப்பமான காலநிலை நிலவும் காலம், மழைக்காலம் ஆகிய காலங்களில், அவர்கள் வாழ விரும்பிய பகுதிகளைத் தருக? (04 புள்ளிகள்)

(iii) ஆரம்ப வரலாற்றுக் காலக் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு பௌதிகக் காரணிகள் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) வரலாற்றுக்கு முற்பட்ட காலம், முன்வரலாற்றுக் காலத்தில் பின்பற்றப்பட்ட தொழில்நுட்ப முறைகளை இவ்விரண்டு காரணிகளினடிப்படையில் விபரிக்குக.

(06 புள்ளிகள்)

4.

(i) கீழே A,B.C எனத் தரப்பட்ட மன்னர்கள் மக்கள் முன் தோற்றம் தர விரும்பிய முறையை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A- நிஷங்க மல்ல மன்னன்

B- முதலாம் காசியப்பன்

C- குட்ட கண்ண அபயன் (03 புள்ளிகள்)

(ii) கீழே A,B,C,D எனத் தரப்பட்ட திசைகளில் அமைந்திருந்த இலங்கையின் புராதன துறைமுகங்கள் ஒவ்வொன்று தருக?

A- கிழக்கு

B- தெற்கு

C- மேற்கு

D- வடக்கு (04 புள்ளிகள்)

(iii) புராதன இலங்கையின் சந்தை நிர்வாகம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சட்டங்கள் இரண்டினை விளக்குக.? (05 புள்ளிகள்)

(iv) வசப மன்னனின் மூன்று அரசியல் பணிகளை மூன்று உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

5.

(i) நீர் முகாமைத்துவம் என்பதனால் விளங்கிக் கொள்கின்ற விடயம் யாது? (01 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பெரும் குளங்கள் அமைக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் இரண்டு தருக?

(02 புள்ளிகள்)

(iii) (A) பாரிய குளங்கள் அமைக்கும் போது கவனத்தில் எடுத்துக் கொண்ட விடயங்கள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

(B) அணைக்கட்டு ஒன்று அமைக்கும் போது அடுக்காகப் போடப்பட்ட இரண்டு படைகளைத் தருக? (02 புள்ளிகள்)

(iii) (A) புராதன மடைக்கதவு கண்டறியப்பட்ட நதி (01 புள்ளிகள்)

(B) (1). கால்வாய்களை அமைப்பதில் ஈடுபட்ட அதிகாரி (01 புள்ளிகள்)

(2) உலர்வலய மக்களின் நீர்த்தேவையைப் பூர்த்திசெய்வதற்காக மகாவாவிகளை அமைத்த மூன்று மன்னர்களின் பெயர்களைத் தருக? (03 புள்ளிகள்)

(iv) A,B எனத் தரப்பட்ட குளத்தின் பகுதிகளை விளக்குக?

A- அலை தாங்கி

B- கலிங்கல் தொட்டி (06 புள்ளிகள்)

6.

(i) ஆரம்ப கிராம மக்களின் வாழ்வாதாரமாக இருந்த மூன்று தொழில்களைத் தருக (03 புள்ளிகள்)

(ii) இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தில் உருவாகிய நகரங்களில் காணப்பட்ட நான்கு பண்புகளைத் தருக? (04 புள்ளிகள்)

(iii) கண்டி இராட்சியத்தின் பிரதேச நிர்வாகம் (ரட்டவசம) தொடர்பாக இரண்டு காரணிகளினடிப்படையில் விளக்கக? (05 புள்ளிகள்)

(iv) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய ஐரோப்பிய இனத்தவர்களால் கண்டி இராச்சியம் கைப்பற்ற முடியாமல் போனமைக்கான மூன்று காரணங்களை விளக்குக? (06 புள்ளிகள்)

7.

(i) கீழே A,B,C எனத் தரக்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A- 1795 இல் இலங்கையிலிருந்த ஒல்லாந்து ஆளுனர்

B- பிரித்தானியக் கிழக்கிந்தியகம்பனியின் கரையோரப் பிரதேசங்களில் வரி அறவிடுவதற்கு நியமித்திருந்த கலெக்டர் என்னும் உத்தியோகத்தர்களின் நிர்வாக மையம்

C- இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியால் விதிக்கப்பட்ட புதிய வரிகளில் முக்கியமானது (03 புள்ளிகள்)

(ii) 1803 ஆக் ஆண்டு ஆளுநர் நோர்த் கண்டி இராட்சியம் மீது மேற்கொண்ட படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான நான்கு காரணங்களைத் தருக? (04 புள்ளிகள்)

(iii) கி.பி 1818 ஆண்டு பிரித்தானியருக்கு எதிரான முதலாவது சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான இரண்டு காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கோல்புறுக் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் மூன்று முக்கியமான அம்சங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி III

8.

(i) கீழே A,B,C என நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன அவர்கள் கண்டறிந்த இடங்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A- வாஸ்கொடகாமா

B- கிறிஸ்டோபர் கொலம்பஸ்

C- பெர்டினன்ட் மகலன் ( 03 புள்ளிகள்)

(ii) மைக்கல் அஞ்சலேவால் வடிவமைக்கப்பட்ட நான்கு உருவச் சிலைகளைத் தருக (04 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இரண்டு மாற்றங்களைத் தருக? (05 புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சியினால் இலங்கையில் ஏற்பட்ட அரசியல்,சமூக பண்பாட்டு மாற்றங்கள் மூன்றினைத் விளக்குக? (06 புள்ளிகள்)

9.

(i) ஐரோப்பாவில் குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்த பிரித்தானியா தவிர்ந்த மூன்று நாடுகளைத் தருக? (03 புள்ளிகள்)

(ii) கீழே A,B,C,D எனத்தரப்பட்ட கூற்றுக்குரிய விடைகளை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A- நில உடமையாளர்களால் விவசாயிகளின் சிறிய நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பெரிய பண்ணைகளாக உருவாக்கப்பட்டமை

B- பிரித்தானியாவில் மூலப் பொருட்கள், மூலதனம் முடிவுப் பொருட்கள் என்பவற்றை விநியோகிக்கும் மத்திய நிலையமாக விளங்கிய நகரம்

C- நெசவுக் கைத்தொழிலின் மென்மையானது, சக்தி வாய்ந்ததுமான நூலை உற்பத்தி செய்வதற்கு உதவிய இயந்திரம்.

D- 1840ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய தபால் சேவை (04 புள்ளிகள்)

(iii) கைத்தொழிற் புரட்சியினால் விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழிற் புரட்சி இலங்கையில் ஏற்படுத்திய மூன்று மாற்றங்களை விளக்குக? (06 புள்ளிகள்)

***